தேர்வு நாள்: 01.05.2022 | TEST - 14 (TAMIL) | நேரம்: 180 நிமிடங்கள்

**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 23 - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

**1)** இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் நூல்?

A) சிலப்பதிகாரம் B) அகநானூறு C) தொல்காப்பியம் D) குறுந்தொகை

**2)** தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதைத் தெரிவிக்கும் ஒரு மருதத்திணை பாடல் இடம்பெறும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) ஐங்குறுநூறு D) புறநானூறு

**3)** பக்தவச்சல பாரதி பற்றிய பின்வரும் வாக்கியங்களில் சரியானது எது?

1. தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை இவர் முன்னெடுத்து வருகிறார்

2. பழங்குடிகள், நாடோடிகள், உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

**4)** "துன்பு உளதுஎனின் அன்றோ / சுகம் உளது? அது அன்றிப் / பின்பு உளது; இடை மன்னும் / பிரிவு உளது என உன்னேல்; / முன்பு உளெம் ஒரு நால்வேம் / முடிவு உளது என உன்னா / அன்பு உள, இனி, நாம் ஓர் / ஐவர்கள் உளர் ஆனோம்" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) பெரியபுராணம் B) கலிங்கத்துப்பரணி C) மூவருலா D) கம்பராமாயணம்

**5)** பொருந்தாப் பொருள் எது?

A) அனகன் - இராமன் B) உவா - பௌர்ணமி

C) உடுபதி - சந்திரன் D) செற்றார் - பகைவர்

**6)** "அன்பு உள, இனி, நாம் ஓர் / ஐவர்கள் உளர் ஆனோம்" என இராமன் யாரைப் பார்த்துக் கூறினான்?

A) குகன் B) வீடணன் C) சுக்கிரீவன் D) அனுமன்

**7)** பொருள் மயக்கம் ஏற்படுவது எப்போது?

A) எழுதும் போது தேவையான இடங்களில் இடைவெளி விடாதது

B) பேசும் போது தேவையான இடங்களில் இடைவெளி விடாதது

C) பேசும்போதோ எழுதும்போதோ தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவது

D) மேற்கண்ட அனைத்தும்

**8)** பின்வருவனவற்றுள் சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

A) ஆண்டுதோறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்

B) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்

C) தி. ஜானகிராமன் நினைவாக மறைந்த ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்

D) ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக

ETW ACADEMY

9) பின்வரும் தொடர்களில் பொருள் சரியாக வெளிப்படும் தொடரைத் தேர்க

A) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்

B) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

C) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்

D) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

10) இதில் எது நேரிணைச்சொல்?

A) உற்றாருறவினர் B) சீரும்சிறப்பும்

C) மேடுபள்ளம் D) மேற்கண்ட அனைத்தும்

11) சரியான தொடர்கள் எவை?

A) அவன் அல்லன் & அவள் அல்லள் B) அவர் அல்லர், அவர்கள் அல்லர்

C) நாய் அன்று, நாய்கள் அல்ல D) மேற்கண்ட அனைத்தும்

12) வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.

ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்

A) 4, 1, 3, 2 B) 2, 3, 1, 4 C) 4, 3, 1, 2 D) 2, 4, 1, 3

13) "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு / சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது?

A) தனிக்குடும்ப முறை B) விரிந்த குடும்ப முறை

C) தாய்வழிச் சமூகமுறை D) தந்தைவழிச் சமூகமுறை

14) "திராவிட சாஸ்திரி" என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்டவர்?

A) பரிதிமாற் கலைஞர் B) ஆபிரகாம் பண்டிதர்

C) மறைமலை அடிகள் D) சங்கரதாஸ் சுவாமிகள்

15) களவழி நாற்பது நூலைத் தழுவி பரிதிமாற் கலைஞரால் இயற்றப்பட்ட நூல்?

A) ரூபாவதி B) கலாவதி

C) மான விஜயம் D) வணிகபுரத்து வீரன்

16) கம்பர் யார்? - என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) அ.ச. ஞானசம்பந்தம் B) வ.சுப. மாணிக்கம்

C) வையாபுரிப்பிள்ளை D) மயிலை சீனி. வேங்கடசாமி

17) யார் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவார்?

A) உலகத்தில் உண்மையாக வாழ்பவர் B) உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்பவர்

C) உலகத்தில் தீமை செய்து வாழ்பவர் D) உலகத்தில் நன்மை செய்து வாழ்பவர்

ETW ACADEMY

**18)** தாம் வறியர் என்ற காரணத்தைக் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்ய மாட்டார். - யார்?

A) செல்வம் குறையுடையோர்
B) பிறன் கைப்பொருளை விரும்பாதவர்
C) ஐம்புலனை வென்ற தெளிவுடையோர்
D) பழியான செயல்களில் ஈடுபடுவோர்

**19)** ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்றப் பழமொழியில், 'நால்' என்ற சொல்லும், 'இரண்டு' என்ற சொல்லும் குறிப்பிடுபவை முறையே?

A) திருக்குறள், நாலடியார்
B) நாலடியார், ஏலாதி
C) ஏலாதி, திருக்குறள்
D) நாலடியார், திருக்குறள்

**20)** பொருத்திக் காட்டுக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1. சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2. ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் – 3. தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4. நன்மை கடலின் பெரிது

A) 4, 3, 2, 1
B) 3, 4, 1, 2
C) 1, 2, 3, 4
D) 2, 3, 4, 1

**21)** மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்?

A) ம. இராசமாணிக்கனார்
B) ப. சுப்பிரமணியனார்
C) நாவலர் சோமசுந்தர பாரதியார்
D) வ.சுப. மாணிக்கம்

**22)** இவர் நற்றிணை நூலின் உரையாசிரியர் மற்றும் பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தவர். யார் இவர்?

A) பின்னத்தூர் நாராயணசாமி
B) பின்னத்தூர் தாமோதரனார்
C) பின்னந்தூர் இராசமாணிக்கனார்
D) பின்னந்தூர் இளங்கோ கிருஷ்ணன்

**23)** இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்
B) பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார்
C) பேராசிரியர் பிரபா கல்விமணி
D) பேராசிரியர் அ.கா. பெருமாள்

**24)** சுவடியில் தவப்படும் மையின் பயன்கள்?

1. எழுத்துக்களைத் தெளிவாகக் காட்டும்
2. எழுத்துக்கள் எப்போதும் அழியாது
3. கண்ணுக்குக் குளிர்ச்சி தரும்

A) 1 & 2
B) 2 & 3
C) 1 & 3
D) மேற்கண்ட அனைத்தும்

**25)** மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை நிலைநாட்டுவர். அதன் பொருட்டு அவர்கள் கொடிகட்டியிருப்பரென்று _____ முதலிய நூல்களால் அறிகிறோம்.

A) நெடுநல்வாடை
B) மதுரைக்காஞ்சி
C) பட்டினப்பாலை
D) முல்லைப்பாட்டு

ETW ACADEMY

26) தமிழ்நாட்டில் உ.வே.சா அவர்களின் திருவுருவச்சிலை வங்கக் கடலை நோக்கி நிற்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள புகழ்பெற்றக் கல்லூரி / பல்கலைக் கழகம்?

A) பூம்புகார் கலை அறிவியல் கல்லூரி
B) சென்னை மாநிலக் கல்லூரி
C) சென்னைப் பல்கலைக்கழகம்
D) இராணிமேரி கல்லூரி

27) சுரதா நடத்திய இலக்கிய ஏடுகளில் சேராதது?

A) இலக்கியம் B) விண்மீன் C) ஊர்வலம் D) கவி

28) முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்ட எந்த இதழை சுரதா நடத்தினார்?

A) இலக்கியம் B) விண்மீன் C) ஊர்வலம் D) காவியம்

29) சி.மணி, இலக்கணம் பற்றிப் படைத்த நூல் எது?

A) யாப்பும் கவிதையும்
B) வச்சனத்தி மாலை
C) பிரயோக விவேகம்
D) அறுவகை இலக்கணம் - ஏழாம் இலக்கணம்

30) சி.மணியின் புனைப்பெயர்கள் எவை?

A) நபி, பிக்ஷு
B) வே.மாலி, செல்வம்
C) வீரப்புலவர், பொன்னியின் செல்வர்
D) மேற்கண்ட எதுவுமில்லை

31) "அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென / வறுந்தலை உலகமும் அன்றே; அதனால் / காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை; / மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர் / மழுவுடைக் காட்டகத்து அற்றே / எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே" என்னும் புறப்பாடலை இயற்றியவர் யார்?

A) வெண்ணிக்குயத்தியார்
B) ஔவையார்
C) ஒக்கூர் மாசாத்தியார்
D) அனிலாடு முன்றிலார்

32) "கலன்" என்றால் என்ன?

A) யாழ் B) கலப்பை C) கோடரி D) விதை

33) விரைந்து ஓடும் குதிரைக் கொண்டவன் என ஔவையாரால் புகழப்பட்ட மன்னன்?

A) பொகுட்டெழினி
B) திருமுடிக்காரி
C) பாரி
D) நெடுமான் அஞ்சி

34) சாலைப் போக்குவரத்து உதவித் தொலைபேசி எண்?

A) 1091 B) 1098 C) 103 D) 1077

35) ஏனைய பாக்களைவிட வரையறுத்த இலக்கணக் கட்டுக்கோப்பு உடையதால், வெண்பாவை எவ்வாறு அழைப்பர்?

A) வண்பா B) இன்பா C) வன்பா D) தண்பா

36) வெண்பாவிற்குரிய ஓசை?

A) அகவலோசை
B) செப்பலோசை
C) துள்ளலோசை
D) தூங்கலோசை

ETW ACADEMY

37) வெண்பாவிற்கான இலக்கணத்திலிருந்து வேறுபடுவது?

A) இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமைய வேண்டும்

B) ஈற்றடி நாற்சீராகவும் ஏனையவை முச்சீராகவும் இருக்கும்

C) ஈரசைச் சீர்கள் மாச்சீரும் விளச்சீரும், மூவசைச் சீரில் காய்ச்சீரும் வரும்

D) ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்ப்பாடுகளுள் ஒன்றைக்கொண்டு முடியும்

38) யாருடனான மறைமலையடிகளின் நட்பு, அவரது 'தனித்தமிழ்' மீதான பற்றை மிகுதியாக்கியது.?

A) வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி

B) ஆபிரகாம் பண்டிதர்

C) உ.வே.சாமிநாதர்

D) மீனாட்சி சுந்தரனார்

39) மறைமலையடிகளின் இயற்பெயர்?

A) சுவாமி தனிகாசலம்

B) சுவாமி வெங்கடேசன்

C) சுவாமி வேதாசலம்

D) சுவாமி ஜெயகிருஷ்ணன்

40) பொருத்துக.

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

A) 1,2,4,3 B) 4,3,1,2 C) 2,3,1,4 D) 3,4,2,1

41) நூல்களும் நூலாசிரியர்களும் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பொருந்தாத இணை எது?

A) நீங்களும் கவிபாடலாம் - கி.வா.ஜகந்நாதன்

B) படைப்புக்கலை - மு. சுதந்திரமுத்து

C) இதுவரை - சுரதா

D) கவிஞராக - அ.கி. பரந்தாமனார்

42) "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கல்", என்று கூறிய அறிவியல் கருத்தாளர் யார்?

A) ஏ.வி.டைசி

B) பேராசிரியர் வேர்

C) டேவிட் கிங்

D) அலெக்சாண்ட்ராவிக்ஸ்

43) வெள்ளச் சமவெளிகள் அழிந்து, வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான முதன்மைக் காரணம்?

A) மணல் அள்ளுவது

B) பருவம் பொய்ப்பது

C) தூர் வாராதது

D) மேற்கண்ட அனைத்தும்

44) நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மையை எப்போது அமைத்தது?

A) 2001 டிசம்பர் 23

B) 2004 டிசம்பர் 23

C) 2009 டிசம்பர் 23

D) 2005 டிசம்பர் 23

45) பின்வருவனவற்றுள் எது அய்யப்ப மாதவனின் கவிதை நூல் இல்லை?

A) மழைக்குப் பிறகும் மழை

B) நானென்பது வேறொருவன்

C) நீர்வெளி

D) நீராலானது

ETW ACADEMY

46) ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் ____ என்று அழைத்தனர்.

A) முன்பனிப் பருவம் B) கூதிர்ப்பருவம்
C) A & B D) மேற்கண்ட எதுவுமில்லை

47) போர்மேற்சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு?

A) கூதிர்ப்பாசறை B) கூதிர்முரசம் C) கூதிர்ச்சமர் D) கூதிர்ப்பறை

48) பொருந்தாப் பொருள் எது?

A) புதுப்பெயல் - புதுமழை B) ஆர்கலி - காற்று
C) கொடுங்கோல் - வளைந்த கோல் D) புலம்பு - தனிமை

49) வளைஇ - இலக்கணக்குறிப்பு தருக.

A) இன்னிசை அளபெடை B) சொல்லிசை அளபெடை
C) செய்யுளிசை அளபெடை D) இசைநிறை அளபெடை

50) புதுப்பெயல், கொடுங்கோல் - இலக்கணக்குறிப்பு தருக

A) வினைத்தொகைகள் B) பெயரெச்சங்கள் C) பண்புத்தொகைகள் D) உருவகங்கள்

51) உத்தம சோழனின் இயற்பெயர்?

A) தஞ்சை பிரகாஷ் B) செல்வராஜ் C) ராஜேந்திரன் D) முத்து

52) உத்தம சோழன் 12 ஆண்டுகளாக நடத்திவரும் மாத இதழ்?

A) கிழக்கு வாசல் உதயம் B) ழ C) கவி D) கனவு

53) "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே / அஃறிணை என்மனார் அவரல பிறவே" என்னும் நூற்பா இடம்பெற்ற நூல்?

A) அகத்தியம் B) தொல்காப்பியம்
C) நன்னூல் D) வெண்பா பாட்டியல்

54) இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்கு ____ என்னும் விகுதி உதவுகிறது.

A) ஆன் B) அன் C) ஆர் D) கள்

55) சரியான தொடர் எது?

A) ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே B) ஒவ்வொரு மனிதர்களும்
C) ஒவ்வொரு விலங்குகளும் D) ஒவ்வொரு வீட்டிலும்

56) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ____

A) அஃறிணை, உயர்திணை B) உயர்திணை, அஃறிணை
C) விரவுத்திணை, அஃறிணை D) விரவுத்திணை, உயர்திணை

ETW ACADEMY

57) பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

A) 4, 1, 2, 3 B) 2, 3, 4, 1 C) 3, 4, 1, 2 D) 4, 3, 1, 2

58) மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர்பெற்ற மாயூரம் வேதநாயகம் பிள்ளை இயற்றிய தமிழின் முதல் நாவல் எது?

A) கமலாம்பாள் சரித்திரம் B) பத்மாவதி சரித்திரம்

C) பிரதாப முதலியார் சரித்திரம் D) சுகுணசுந்தரி

59) நூல்கள் மற்றும் நூலாசிரியர்களில் பொருந்தா இணை எது?

A) பத்துப்பாட்டு ஆராய்ச்சி - மா. இராசமாணிக்கனார் B) சுற்றுச்சூழல் கல்வி - ப. ரவி

C) கருப்பு மலர்கள் - நா. காமராசன் D) வானம் வசப்படும் - எஸ்.ராமகிருஷ்ணன்

60) "குடும்பம்" என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் பயின்று வருகிறது?

A) இன்னா நாற்பது B) நான்மணிக்கடிகை C) நாலடியார் D) திருக்குறள்

61) "குடும்பு" என்ற சொல்லின் பொருள் யாது?

A) கூடி வாழுதல் B) நட்போடு வாழ்தல்

C) அன்போடு வாழ்தல் D) பகையின்றி வாழ்தல்

62) தற்காலிக தங்குமிடத்தை, "புக்கில்" என்று குறிப்பிடும் இலக்கியம்?

A) அகநானூறு B) புறநானூறு C) கலித்தொகை D) சிலப்பதிகாரம்

63) பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை, "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" எனக் குறிப்பிடும் நூல் எது?

A) குறிஞ்சிப்பாட்டு B) முல்லைப்பாட்டு C) குறுந்தொகை D) கலித்தொகை

64) தமிழர் குடும்பமுறை - என்றக் கட்டுரையை எழுதியவர்?

A) க. பஞ்சாங்கம் B) மு. இராமசுவாமி C) பக்தவத்சல பாரதி D) தொ. பரமசிவம்

65) ஜலாலுதீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் அழகாக மொழியாக்கம் செய்தவர் யார்?

A) ஜலாலுதீன் ரூமி B) சேத்தன் பகத்

C) கோல்மன் பார்க்ஸ் D) இரவீந்திரநாத் தாகூர்

66) "அமலன்" என்றழைக்கப்படுபவர்?

A) பரதன் B) சத்ருகன்

C) இலக்குவன் D) இராமன்

ETW ACADEMY

67) "குகனோடும் ஐவர் ஆனேம் / முன்பு; பின் குன்று சூழ்வான் / மக னொடும் அறுவர் ஆனேம்" எனத் துவங்கும் கம்பராமாயாணப் பாடலில் யாரோடு அறுவர் ஆனோம்" என இராமன் குறிப்பிடுகிறார்?

A) அனுமன் B) சுக்கிரீவன் C) வீடணன் D) வாலி

68) பின்வருபவைகளுள், பூமணியின் சிறுகதைத் தொகுப்பு எது?

A) அறுப்பு B) புனர் ஜென்மம் C) அப்பா பிள்ளை D) வரப்பிரசாதம்

69) "பாண்டியன் தன்னுடைய கவிதையைப் படித்தான்" எனப் பொருள்படும் தொடர் எது?

A) பாண்டியன் படித்தான் கவிதையைதன்
B) படித்தான் பாண்டியன்தன் கவிதையை
C) பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்
D) பாண்டியன்தன் கவிதையைப் படித்தான்

70) 'யாரோ ஒருவருக்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருள் தரும் தொடர் எது?

A) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்
B) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்
C) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்
D) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

71) பின்வரும் வாக்கியங்களில் தவறானது எது?

A) உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் உடம்படுமெய்களைச் சேர்த்துத்தான் எழுத வேண்டும். (எ.கா: மணியடித்துச் சென்றான்)

B) பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும். (எ.கா: ஈக்கள் மொய்த்தன, குரங்குகள் உண்டன)

C) இரட்டைக்கிளவிச் சொற்களைச் பிரித்து எழுத வேண்டும் (எ.கா: பட பட எனச் சிறகை அடித்தது)

D) சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றைச் சேர்த்தே எழுத வேண்டும். எ.கா: சுடராழி - சுடர் + ஆழி)

72) இவற்றுள் சரியான தொடர் எது?

A) திருவளர்ச்செல்வன்
B) திருநிறைச்செல்வன்
C) திருவளர்செல்வன்
D) மேற்கண்ட அனைத்தும்

73) பரிதிமாற்கலைஞர், 1893ஆம் ஆண்டு எக்கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்?

A) பாளையங்கோட்டை, புனித சேவியர் கல்லூரி
B) சென்னை பல்கலைக்கழகம்
C) சென்னை மானிலக் கல்லூரி
D) சென்னை கிறித்துவக் கல்லூரி

74) மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து பரிதிமாற் கலைஞர் வெளியிட்ட ஞானபோதினி ஒரு ....................

A) குழந்தை இதழ்
B) அறிவியல் இதழ்
C) வணிக இதழ்
D) வாழ்வியல் இதழ்

ETW ACADEMY

75) திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு?

A) 1811 B) 1812 C) 1820 D) 1813

76) வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?

A) செய்யாமல் செய்த உதவி B) பயன் தூக்கார் செய்த உதவி

C) தினைத்துணை நன்றி D) காலத்தினால் செய்த நன்றி

77) உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களில் முறை வைப்பவர்?

A) உபாத்தியாயினி B) உப உபாத்தியாயர்

C) வேறொரு உபாத்தியாயர் D) சட்டாம்பிள்ளை

78) "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்" என்னும் நூல்?

A) சிந்தாமணி B) சிலப்பதிகாரம்

C) மூதுரை D) கொன்றை வேந்தன்

79) எழுத்தாணியின் 3 வகைகளில் சேராதது எது?

A) மடக்கெழுத்தாணி B) வாரெழுத்தாணி

C) குட்டெழுத்தாணி D) குண்டெழுத்தாணி

80) மாணாக்கர்களை ஆசிரியர்கள் எதன்மூலம் வழிப்படுத்தி வந்தனர்?

A) கொடிய தண்டனைகள் B) மதிப்பெண் குறைப்பு நடவடிக்கைகள்

C) பாசாங்கான மிரட்டல்கள் D) அன்பு

81) ஒருவன் இறக்குமளவும் படிக்கவேண்டுமென்பதை "என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு!" - என்று குறிப்பிடுபவர் யார்?

A) செயங்கொண்டார் B) இளங்கோவடிகள் C) கம்பர் D) திருவள்ளுவர்

82) "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற / வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு; / மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும் / மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;" என்றக் கவிதையடிகளை இயற்றியவர்?

A) பாரதிதாசன் B) கவிமணி தேசிக விநாயகனார்

C) வாணிதாசன் D) சுரதா

83) சுரதா பெற்ற விருதுகளில் சேராதது எது?

A) தமிழக அரசின் கலைமாமணி விருது

B) பாரதிதாசன் விருது

C) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது

D) பிரெஞ்சு அரசின் செவ்வாலியர் விருது

84) சி. மணியின் இயற்பெயர்?

A) சி. சோமசுந்தரம் B) சி. பழனிசாமி C) சி. ரங்கநாதன் D) சி. தருமு சிவராம்

**85)** சி.மணி நடத்திய இதழ்?

A) நடை B) ழ

C) கவி D) அன்னம் விடு தூது

**86)** சி.மணியின் புகழ்பெற்ற கவிதை நூல்கள் எவை?

A) எழிலோவியம், தொடுவானம்

B) காவியப்பாவை, புதியதொரு விதி செய்வோம்

C) புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு

D) வரும் போகும், ஒளிச்சேர்க்கை

**87)** எத்திசை = எ + திசை - புணர்ச்சி விதி கூறுக

A) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

B) வலி மிகல்

C) மகர மெய் திரிதல்

D) இயல்பினும் விதியினும் நின்ற உயிரமுன கசதப மிகும்

**88)** எட்டுத்தொகை நூல்களில் ஔவையார் பாடிய எத்தனை பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன?

A) 47 B) 59 C) 51 D) 53

**89)** மூன்றடி வெண்பா எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) குறள் வெண்பா

B) நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா

C) ப.்.றொடை வெண்பா

D) கலிவெண்பா

**90)** வெண்பா எத்தனை வகைபடும்?

A) 3 B) 5 C) 7 D) 9

**91)** நேரிசை வெண்பாவில் இரண்டாம் அடியில் தனிச்சீர் வரும். தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு அமைக்கப்படுபவை ..................

A) நேரிசை வெண்பா B) இன்னிசை வெண்பா

C) சிந்தியல் வெண்பா D) ப.்.றொடை வெண்பா

**92)** "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடையச்சொல்?

A) இலக்கியம் B) கணிதம் C) புவியியல் D) வேளாண்மை

**93)** ஐயப்பமாதவனின் கவிதைக் குறும்படம் எது?

A) நேற்று B) இன்று

C) நாளை D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

94) “வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப் / பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென” நெடுநல்வாடைப் பாடலின் ஆசிரியர் யார்?

A) மாங்குடி மருதனார்

B) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்

C) பெருங்கௌசிகனார்

D) காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்

95) வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடும் திணை?

A) வெட்சி B) வாகை C) கரந்தை D) காஞ்சி

96) கவுள் - என்றால் என்ன?

A) வாய் B) மூக்கு C) கன்னம் D) தாடை

97) நெடுநல்வாடையின் பாட்டுடைத்தலைவன் யார்?

A) சேரன் செங்குட்டுவன்

B) முதலாம் குலோத்துங்கன்

C) பாண்டியன் நெடுஞ்செழியன்

D) முதலாம் இராசராசன்

98) நெடுநல்வாடை எத்தனை அடிகளைக் கொண்டது?

A) 269 B) 317 C) 188 D) 248

99) பஞ்சகாலத்தில் தனது சொத்து முழுவதையும் கொடையளித்த மாயூரம் வேதநாயகத்தைப் போற்றி, "நீயே புருஷ மேரு" என்று பாடியவர் யார்?

A) கோபாலகிருஷ்ண பாரதியார்

B) சுத்தானந்த பாரதியார்

C) சுப்ரமணிய தேசிகர்

D) சுப்ரமணிய பாரதியார்

100) மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களோடு நட்பு பாராட்டித் தொடர்புகொண்டிருந்த சமகாலத் தமிழறிஞர்களில் சேராதவர்?

A) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

B) சுப்ரமணிய தேசிகர்

C) பலபட்டை சொக்கநாதப்புலவர்

D) இராமலிங்க அடிகளார்

101) "இரவுக் குறியே இல்லகத் துள்ளும் / மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே / மனையகம் புகாஅக் காலை யான" - என்னும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும் இரு வாழிடங்கள்?

A) இல், மனை B) குரம்பை, முன்றில் C) புலப்பில், மாடம் D) முற்றம், நகர்

102) 'தம்மனை', நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கு எந்த நூலில், எந்தத் திணை பாடலில் உள்ளது?

A) ஐங்குறுநூறு, முல்லைத்திணை

B) அகநானூறு, மருதத்திணை

C) குறுந்தொகை, நெய்தல்திணை

D) கலித்தொகை, பாலைத்திணை

ETW ACADEMY

103) "நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும் / எம்மனை வதுவை நல்மணம் கழிக" - என்னும் பாடலடிகள் இடம்பெறும் நூல்?

A) கலித்தொகை B) குறுந்தொகை C) ஐங்குறுநூறு D) புறநானூறு

104) மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்தது குறித்து, "மறியிடைப் படுத்த மான்பிணை போல்" என்று குறிப்பிடும் நூல் எது?

A) ஐங்குறுநூறு B) முல்லைப்பாட்டு C) அகநானூறு D) நெடுநல்வாடை

105) சங்ககாலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுற்று, கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை குறிப்பிடும் புறநானூற்றுப் பாடலை இயற்றிய புலவர்?

A) அவ்வையார் B) ஒக்கூர் மாசாத்தியார்
C) ஓரம்போகியார் D) கழைதின் யானையார்

106) எது பக்தவத்சல பாரதி இயற்றிய நூல் அல்ல?

A) பண்பாட்டு மானிடவியல் B) தமிழகப் பழங்குடிகள்
C) பாணர் இனவரைவியல் D) பண்பாட்டு அசைவுகள்

107) எதிர்பாராத விருந்தாளியாக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது எதனை?

A) ஆனந்தம் B) மனச்சோர்வு
C) அற்பத்தனம் D) மேற்கண்ட அனைத்தும்

108) ஜலாலுத்தீன் ரூமியின் ஆங்கில மொழியாக்கக் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

A) சிற்பி பாலசுப்ரமணியம் B) என். சத்தியமூர்த்தி C) டாக்டர் ஸ்ரீதர் D) கமலாலயன்

109) சடாயுவிற்கு மகனாக இருந்து இறுதிச் சடங்குகளைச் செய்தவன்?

A) சுக்கிரீவன் B) அனுமன் C) குகன் D) இராமன்

110) இலக்கணக்குறிப்பு தருக. - உளது

A) உரிச்சொற்றொடர் B) வினைத்தொகை
C) மரூஉ D) இடைக்குறை

111) 2014இல் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற பூமணியின் புதினம்?

A) வெக்கை B) அஞ்ஞாடி C) கொம்மை D) பிறகு

112) "அவன் தனது தவறை உணர்ந்துவிட்டால் நல்லது" எனப் பொருள் படும் தொடர் எது?

A) தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று
B) தன் தவற்றினை உணர்ந்துவிடு வானாயின் நன்று
C) தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று
D) தன்தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று

113) அஃறிணைக்குரிய வேற்றுமை உருபு?

A) கு B) இன் C) அது D) ஐ

114) பின்வரும் தொடர்களில் சரியானது எது?

A) கோவலன் மதுரைக்குச் சென்றது

B) சென்னையிலிருந்து நேற்று வருகிறான்

C) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

D) பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றன

115) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ...

A) அறவோர், துறவோர் B) திருமணமும், குடும்பமும்

C) மன்றங்களும் அவைகளும் D) நிதியமும் சுங்கமும்

116) "உவா உற வந்து கூடும் / உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

A) சடாயு, இராமன் B) இராமன், குகன் C) இராமன், சுக்ரீவன் D) இராமன், சவரி

117) பரிதிமாற் கலைஞர் யாரிடம் தமிழ் பயின்றார்?

A) மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார் B) மகாவித்வான் சபாபதியார்

C) திருவாவடுதுறை ஆதீனம் D) தனது தந்தையாரிடம்

118) பரிதிமாற் கலைஞரின் 'தனிப்பாசுரத் தொகை' என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

A) எல்லீஸ் B) கால்டுவெல் C) சி.எஸ்.ஜான் D) ஜி.யு.போப்

119) ஒருவருடைய செல்வம் குறையாதிருக்க வள்ளுவர் சொல்லும் வழி?

A) வணிகம் செய்தல் B) பிறர் கைப்பொருளை விரும்பாதிருத்தல்

C) பிறர்க்கு உதவுதல் D) நோயைத் தவிர்த்தல்

120) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் / தன்னையே .................... சினம்

A) சொல்லும் B) கொல்லும் C) வெல்லும் D) அழிக்கும்

121) "வள்ளுவனைப் பெற்றதால் / பெற்றதே புகழ் வையகமே" - இப்பாடலை இயற்றியவர்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) நாமக்கல் கவிஞர் D) முடியரசன்

122) தமிழ்நாட்டிற்கு நவத்வீபம் போன்ற இடங்களிலிருந்து தஞ்சாவூர் ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரிடத்தில் அன்னிய தேசத்து மாணவர்கள் வந்து கல்வி கற்றனர் என்பதை எம்மன்னனின் சாசனம் தெரிவிக்கின்றது?

A) முதலாம் இராசஇராசன் B) முதலாம் இராசேந்திரன்

C) முதலாம் குலோத்துங்கன் D) முதலாம் மகேந்திரவர்மன

123) உயிர்மீட்சி என்னும் தலைப்பில் யாருடைய இலக்கியக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன?

A) சி.வை.தாமோதரனார்

B) ஆறுமுக நாவலர்

C) சோமசுந்தர பாரதியார்

D) உ.வே.சாமிநாதர்

ETW ACADEMY

ETW ACADEMY

124) உ.வே.சாமிநாதரின் சிறப்புகளில் சேராதது எது?

A) சிறந்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் B) மிகச்சிறந்த நாட எழுத்தாளர்

C) இணையற்ற ஆசிரியர் D) புலமைப் பெருங்கடல்

125) உ.வே.சா அவர்களின் பெயரில் நூலகம் அமைந்துள்ள இடம்?

A) சென்னை, திருவான்மியூர் B) சென்னை, திருவல்லிக்கேணி

C) சென்னை, சாந்தோம் D) சென்னை, பெசண்ட் நகர்

126) புதுக்கவிதையில் சி.மணி மிகுதியாகப் பயன்படுத்திய உத்தி?

A) குறியீடு B) உள்ளுறை C) உவமை D) அங்கதம்

127) சி. மணி பெற்ற விருதுகளில் சேராதது?

A) விளக்கு விருது B) தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக விருது

C) ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது D) கவி காமு ஷெரிப் விருது

128) வயங்குமொழி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) உரிச்சொற்றொடர் D) வினையெச்சம்

129) "சிறாஅர்" என்பதன் இலக்கணக்குறிப்பு?

A) சொல்லிசை அளபெடை B) இன்னிசை அளபெடை C) இசைநிறை அளபெடை D) உயிரளபெடை

130) _____ காலத்திலிருந்து வெண்பா இலக்கியங்கள் பெருகத் தொடங்கின.

A) சங்ககாலம் B) சங்கம் மருவிய காலம்

C) பக்தி இலக்கிய காலம் D) நவீன காலம்

131) வெண்பா எந்தத் தளையால் மட்டுமே அமையவேண்டும் என்பது விதி?

A) வெண்டளை B) கலித்தளை C) வஞ்சித்தளை D) ஆசிரியத்தளை

132) இவற்றுள் ஈரசைச்சீர்கள் எவை?

1. மா

2. விளம்

3. காய்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

133) உத்தம சோழன் எழுதிய "முதல் கல்" சிறுகதை எத்தொகுப்பில் உள்ளது?

A) செல்வராஜ் சிறுகதைகள் B) உத்தம சோழன் சிறுகதைகள்

C) தஞ்சைச் சிறுகதைகள் D) சோழநாட்டுச் சிறுகதைகள்

134) பின்வரும் நூல்களில் உத்தம சோழனின் சிறுகதைத் தொகுப்புகள் எவை?

A) மனிதத் தீவுகள் & குருவி மறந்த வீடு B) கோடை வயல் & மீட்சி விண்ணப்பம்

C) நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் D) மேற்கண்ட அனைத்தும்

**135)** உத்தம சோழனின் புதினம் எது?

A) தொலைதூர வெளிச்சம் B) கசக்கும் இனிமை

C) கனல்பூக்கள் D) மேற்கண்ட அனைத்தும்

**136)** பின்வருவனவற்றுள் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துவது?

A) பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் B) வினைச்சொற்களும், இடைச்சொற்களும்

C) இடைச்சொற்களும், உரிச்சொற்களும் D) உரிச்சொற்களும், பெயர்ச்சொற்களும்

**137)** உலக மொழிகள் அனைத்திலும் மிகுதியாகக் காணப்படுவது?

A) இடைச்சொற்கள் B) பெயர்ச்சொற்கள் C) வினைச்சொற்கள் D) உரிச்சொற்கள்

**138)** தமிழில், குழந்தை, கதிரவன் ஆகிய சொற்கள் எத்திணைக்கு உரியவை?

A) உயர்திணை B) அஃறிணை

C) இருதிணைகளுக்கும் பொதுவானவை D) இருதிணைகளுக்கும் வராது

**139)** ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர்கள் அமையும்போது எதைப்பொறுத்து பால் அறியப்படுகிறது?

A) எழுவாய் B) வினைமுற்று

C) செயப்படுபொருள் D) மேற்கண்ட அனைத்தும்

**140)** இக்காலத் தமிழில் ஒருமை பன்மை வேறுபாடு எதில் வெளிப்படுகிறது?

A) எழுவாய் B) செயப்படுபொருள்

C) பயனிலை D) மேற்கண்ட மூன்றிலும்

**141)** உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக்கு எடுத்துக்காட்டு தருக.

A) நீங்கள் முயற்சி செய்வீர் B) நீ முயற்சி செய்

C) நாம் முயற்சி செய்வோம் D) நாங்கள் முயற்சி செய்வோம்

**142)** தமிழில் திணைப் பாகுபாடு எதன் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது?

A) பொருட்குறிப்பு B) சொற்குறிப்பு

C) தொடர்க்குறிப்பு D) எழுத்துக்குறிப்பு

**143)** உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது?

A) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது B) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

C) காலநிலை மாறுபடுகிறது D) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

**144)** தாய்வழிச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய "சேரநாட்டு மருமக்கள் தாய முறை" பற்றிக் கூறும் நூல்?

A) குண்டலகேசி B) கலித்தொகை

C) பரிபாடல் D) பதிற்றுப்பத்து

ETW ACADEMY

**145)** இவளது மகன் என்றப் பொருளில் வரும், "என்மகள் ஒருத்தியும் பிறன்மகன் ஒருவனும்" எனவரும் பாடல் இடம்பெற்ற நூல்?

A) அகநானூறு B) புறநானூறு C) கலித்தொகை D) நற்றிணை

**146)** ஜலாலுத்தீன் ரூமியின் ஆங்கில மொழியாக்கக் கவிதைகள் எந்தத் தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது?

A) தாகங்கொண்ட மீனொன்று

B) மங்கியதோர் நிலவினிலே

C) மைய்யழி கரையோரம்

D) பறவைகள் ஒருவேளை தூங்கிப்போயிருக்கலாம்

**147)** ஜலாலுதீன் ரூமியின் சூஃபி தத்துவப் படைப்பான மஸ்னவி எத்தனைப் பாடல்களைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது?

A) 12600 B) 25600 C) 20600 D) 32600

**148)** கம்பரின் காலம்?

A) ஒன்பதாம் நூற்றாண்டு B) பத்தாம் நூற்றாண்டு

C) பதினொறாம் நூற்றாண்டு D) பன்னிரண்டாம் நூற்றாண்டு

**149)** பூமணியின் இயற்பெயர்?

A) பூ. மணிகண்டன் B) பூ. மணியன்

C) பூ. மாணிக்கவாசகர் D) பூ. மாணிக்கம்

**150)** பின்வரும் எது ஒருசொல் என்னும் தன்மை கொண்டது மற்றும் பிரித்து எழுதக்கூடாதது?

A) பன்புத்தொகை B) வினைத்தொகை

C) உவமைத்தொகை D) மேற்கண்ட அனைத்தும்

***

© ETW Academy

ETW ACADEMY